கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைத்திடுக!

கழக ஆட்சியில் பொதுப்பணித்துறை சாதனைகளை குவித்து வருகிறது!

சட்டப்பேரவையில் – பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கையில் கும்பகோணம் தொகுதி க.அன்பழகன் பேச்சு !

சென்னை, ஏப். 5 – சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையில் கும்பகோணத் தொகுதி உறுப்பினர் க.அன்பழகன் பேசுகையில் கழக ஆட்சியினுடைய பெருமைகளை குவித்து வருகிறது பொதுப்பணித்துறை என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் கும்பகோணம் தொகுதி க.அன்பழகன் பேசியதாவது: –

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்

உள்ளழிக்க லாகா அரண்.

என்றார் அய்யன் திருவள்ளுவர். பகையால் அழிவு வராமல் பாதுகாக்கும் அரண், அறிவு ஒன்றுதான் எனத் இத்திருக்குறளுக்கு விளக்கம் தந்துள்ளார் நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்த திருக்குறளின்படி சீரிய அறிவாற்றல்மூலம் இயக்கத்திற்கு தலைமை பொறுப்பேற்று 2018 ஆம் ஆண்டு முதல் நேர்கொண்ட 11 தேர்தல்களிலும் கண்ணுக்கு எட்டியவரை பகைவர்களே இல்லை என்ற அளவில் வென்று காட்டிய, மாலையில் கண்ட மாவீரர் அன்புத் தலைவர் முதலமைச்சர், திராவிட நாயகர் அவர்களுக்கு என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு. அவர் கூறினார், இவர் கூறினார் என்றில்லாமல் நானே கூறினாலும் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் உன் அறிவு கொண்டு சிந்தித்து உன் புத்திக்கு சரியென்று பட்டால் ஏற்றுக்கொள்; இல்லையேல் தள்ளிவிடு என்று சொன்னவர் தந்தை பெரியார். அவருடைய மனிதநேயத்தையும், 'ஏ, தாழ்ந்த தமிழகமே' என ஏக்கத்துடன் கூறி தமிழாய்ந்தார் சொத்து என தமிழ் சமுதாயத்தின் பெருமைகளை எடுத்துச் சொல்லி தமிழனை தட்டியெழுப்பி, தமிழன் பெருமைகளை நிலைநாட்டி, ஒரு மொழித் திட்டம் தந்து இந்த மாமன்றத்தில் தமிழ்நாடு என்று பெயரிட்ட, தமிழ் நாடு இந்தியாவில் சிறந்து விளங்க, தமிழர்கள் உலக அரங்கில் ஒளிபெற வழி காட்டிய அறிவுமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம் தழைக்க சாதி, மத பேதம் அகல தன்மான உணர்ச்சியுடன் தமிழ்நாடு மகளிர் முன்னேற்றம், கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என்று தமிழ்நாட்டை உயர்த்தி இந்தியாவிற்கே வழிகாட்டிய 'தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அவர்க்கொரு குணம் உண்டு' என்பதை நிலைநாட்டி, உலகப் புகழ் குவித்த அரசியல் ஆசான், ஆட்சிக் கலை மேதை தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்து வாழும், ஜனநாயக சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியில், தன்மான சித்தாந்தங்களில் தந்தை பெரியாராக, தமிழ்மொழி இனமான உணர்வில் பேரறிஞர் அண்ணாவாக, ஜனநாயகம், சமதர்மம், சமூக நீதி, மகளிர் மேம்பாடு, கல்வி, தொழில், வளர்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வடிவெடுத்து,

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து

முந்தி இருப்பச் செயல்.

என்ற குறளுக்கேற்ப திராவிட மாடல் ஆட்சியில் தத்துவத்தின் மூலமாக தமிழ் மண்ணை, தமிழ் சமுதாயத்தை, தமிழர்களை காத்து வளர்த்து, உயர்த்தி இந்தியாவினுடைய மிகச் சிறந்த தமிழ்நாடு என்று இந்தியாவின் no.1 super முதலமைச்சர் என்று உருவான மேதை எங்கள் தலைவர் முதலமைச்சர் அவர்களை மீண்டும் நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இளைஞர்கள், மகளிர்களை சாம்பியன்களாக வளர்த்தெடுத்து தமிழ்நாட்டிற்கு உலகப் புகழ் சேர்த்து வரும் எங்கள் இளம் தலைவர் தமிழ்நாட்டின் எதிர்கால இளைஞர்களை ஈர்க்கும் காந்தமாக விளங்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட நெஞ்சங்களில் நிறைந்தவருமான நம்முடைய இனமான பேராசிரியர் அவர்களை நினைத்து வணங்குகிறேன். எங்கள் இதயத்தில் வாழும் எங்கள் அரசியல் ஆசான் அண்ணன் கோசி. மணி அவர்களை நினைத்து, பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும், பாசத்திற்குரிய அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்பால் பாசமும், நேசமும் கொண்ட, பற்றும், பரிவும் கொண்டிருக்கிற மூன்று முறை என்னை இப்பேரவைக்கு தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிற என் உயிரோடு ஒன்றியே கலந்துள்ள கும்பகோணம் தொகுதி பாசமுள்ள வாக்காள பெருமக்கள் அனைவரையும் நான் வணங்குகிறேன். தோழமைக் கட்சித் தோழர்களையும் நான் வணங்குகிறேன்.

இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் பேசுகிற போது ஒரு கருத்தைச் சொன்னார்.

'உங்கள் தொகுதியில் முதல்வன்' என்ற திட்டத்திற்கான செய்தியில், ஒவ்வொரு வரும் 10 பணிகளைக்

கேட்டார்கள், நாங்களும் 10 பணிகளைக் கொடுத்தோம், அந்த 10 பணிகளில் 4, 5 பணிகள் எடுக்கப்பட்டு, கும்பகோணம் தொகுதிக்கு சுமார் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்படவிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய பேர் ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் பெயரில் நூலகம்!

நம்முடைய பொதுப் பணித் துறையின் மூலமாக, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் நூற்றாண்டு நூலகம் சென்னையில் கட்டப்பட்டு, அமெரிக்காவின் துணை ஜனாதிபதி வந்து பார்த்து மெய் சிலிர்த்து விட்டுப் போன நிகழ்வில், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நினைவு நூற்றாண்டு நூலகம் இன்றைக்கு மதுரையில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது;

கோயம்புத்தூரில் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது; திருச்சியில் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நூலகங்கள் தொடர்ந்து அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில், மதுரையில் "நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்" மாடுபிடி வீரர்களுக்கான அரங்கம் ஒன்று கலைஞர் பெயரால் கட்டப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறை மூலமாக, சென்னையில், MultiSpeciality சிறப்புப் பன்னோக்கு மருத்துவமனை, கிண்டியில் கட்டப்பட்டிருக்கிறது. கொளத்தூரில் கட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்வுகள் அனைத்தும் இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூலமாக கட்டப்பட்டு வருகின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

கும்பகோணம் – மாவட்டமாக ஆக்குங்கள்

முதலமைச்சர் அவர்களே, உங்கள் தொகுதியில் என்கிற பெயரால் பல்வேறு கிராமங்களில் நடைபெற்றுவருகின்ற, மக்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்கின்ற அளவில், பல்வேறு மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன. அனைத்து மனுக்களையும் முடிந்தவரையில், நிறைவேற்றித் தந்திருக்கின்ற நீங்கள், இந்த மாநிலம் எவ்வாறு முன்னேறி இருக்கிறது என்பதற்கு அடையாளமாக பல்வேறு திட்டங்களைச் செய்துகொடுத்த பெருமைக்கு உரியவர்கள் நீங்கள் என்பதை இந்த நேரத்தில் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான் 15வது முறையாக மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுகிறேன். 15 முறையும், கும்பகோணம் மாவட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்று பல்வேறு சான்றுகளைப் பதிவு செய்திருக்கிறேன். கடந்த 10 ஆண்டுகளில் செய்வேன் என்று சொன்னவர்கள், உறுதியளித்தும், செய்ய முடியவில்லை. ஆனால், தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு செய்து கொடுப்பார்கள் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். நானும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களிடம் இது குறித்த மனுவைக் கொடுத்தவுடன், சிரித்துக்கொண்டே வாங்கினார்கள்.

அந்தச் சிரிப்பு, கும்பகோணம் பகுதியில் poster ஆக அச்சடிக்கப்பட்டு, ஒட்டப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்கள் நினைக்கிறார்கள், அதனை முதலமைச்சர் அவர்களும் சிரித்துக் கொண்டே வாங்கியிருக்கிறார்கள், நிச்சயமாக இந்த முறை, கும்பகோணம் மாவட்டமாக ஆக்கப்படும் என்ற நம்பிக்கையில் அந்த மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர் குறுக்கீடு)

திருவள்ளுவர் சிலை அருகே கண்ணாடி பாலம்

பொதுப் பணித் துறை மூலமாக இன்றைக்கு நாடு முழுவதும் பல்வேறு நூலகக் கட்டடங்களையும், பல்வேறு மருத்துவமனைகளையும் கட்டிக் கொடுக்கின்ற முதலமைச்சர் அவர்களை தமிழகம் முழுவதும் பாராட்டுகிறார்கள். நாங்களும் பாராட்டுகிறோம் என்று சொல்லிக்கொண்டு, இந்த நேரத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த 1.1.2000 அன்று குமரிமுனையில் 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார். உலகத் தமிழர்கள் அத்தனை பேரும் பாராட்டினார்கள்.

'மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை

என்நோற்றான் கொல்லெனும் சொல்.'

என்ற திருக்குறளுக்கு ஏற்ப முதலமைச்சர் அவர்கள் பிரம்மாண்டமான அய்யன் திருவள்ளுவன் சிலையையும், சுவாமி விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி கடல் பாலம் ஒன்றை 74 மீட்டரில் சுமார் 37 கோடி ரூபாயில் அமைத்துள்ளார். இது அதிசயம். ஆனால், உண்மை என்பதற்கு அடையாளமாக, நான் அமெரிக்கா, சீனா, கனடா, இலண்டன், கொரியா, சிங்கப்பூர், ஜப்பான், ஆஸ்திரேலியா, துபாய், சிங்கப்பூர் இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். இத்தனை நாடுகளுக்கும் நான் சென்றிருக்கிறேன்.

இத்தனை நாடுகளையும் சென்று பார்க்கின்றபோது ஒரு சரித்திரத்திலே இடம், அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள இடத்தையும், சுவாமி விவேகானந்தர் பாறை அமைந்துள்ள இடத்தையும் இணைக்கும் விதமாக உள்ள கண்ணாடி பாலத்தைப்போல எந்த நாட்டிலும் நான் பார்க்கவில்லை என்பதற்கு அடையாளமாக நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

133 அடி திருவள்ளுவர் சிலையைத் தந்தவர் தந்தை தலைவர் கலைஞர் அவர்கள். 266 அடிக்கு பாலம் அமைத்துக் கொடுத்தவர் மகன் முதலமைச்சர் அவர்கள் என்பதை சொல்லிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நிலை இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் உண்டா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. தமிழ்நாட்டில் மட்டும்தான் முதல்வர் அவர்களுக்கு பாராட்டு என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டுகிறேன்.

கும்பகோணம் நான்கு பக்கங்களிலும் ஏற்படுத்தப்படும் போக்குவரத்து நெரிசலால், மக்களுக்கு ஏற்படும் போக்குவரத்து சிரமங்களை, காவிரி கரையை ஒட்டி ரூ.34 கோடி மதிப்பீட்டில் இணைப்புச் சாலை ஒன்றை அமைப்பதற்காக என்னுடைய வேண்டுகோளுக்கிணங்க அண்ணன் அவர்கள் நேரடியாக வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு அதைச் செய்துத் தருவதாகச் சொன்னார்கள். இந்த ஆண்டே அதை செய்து முடித்துத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி றேன்.

நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஊர், நகரம் வரும்பொழுது வாகனங்களின் வேகத்தை குறைக்க வேண்டும் என்பதற்கு அங்கு அறிவிப்பு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கும்பகோணம் முதல் நீலத்தநல்லூர் கொள்ளிடம் வரை புதிதாக கட்டப்பட்டிருக்கிற பாலம் வரை உள்ள தரமான 8 கி.மீ. தூரத்திலுள்ள சாலையில் 4 கி.மீ. சாலைக்கான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள 4 கி.மீ. சாலையையும் உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை கட்டப்பட்டுள்ள அரசுப் பணியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆனாதால் பழுதாகியுள்ளன. மேலும், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட RDO மற்றும் Tahsildar அலுவலகக் கட்டடங்கள் மிகவும் பழுதான நிலையில் இருக்கின்றன. இவை அனைத்திற்கும் புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் தொகுதியினுடைய தாராசுரத்தில் காரம்பட்டு புறவழிச் சாலை பாதி முடிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள பணிகளையும் முடித்துத்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதனுடைய தொடர்ச்சியாக இந்தப் புறவழிச் சாலைகள் சாக்கோட்டையிலிருந்து திருவாளூர் வழியாக செல்லவிருக்கிற நாச்சியார் கோவிலுக்கு ஓர் இணைப்புச் சாலை அமைத்துத்தர வேண்டும் என்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். கழக ஆட்சியினுடையப் பெருமைகளை குவித்து வரும் பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் தோன்றிய திராவிட மாணவர் கழகம், முதன்முதலில் 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் முதல்களப் பணியாளர்கள் என்ற பெருமைக்குரிய சகோதரர்கள் இருவர் திருவாளர்கள் தாளமுத்து மற்றும் நடராசன்.

மகாமகத் திருவிழாவுக்கு விடுமுறை

இருவரில் ஒருவர் தாளமுத்து அவர்கள் பிறந்து வாழ்ந்த இடம் கும்பகோணம் என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். வடநாட்டில் நடைபெறுவதைப் போன்று 12 ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் மகாமகத் திருவிழா கொண்டாடப்படும் நகரம். அந்த மாசிமகத்திற்கு நானும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, உள்ளூர் விடுமுறை வேண்டுமென்று கேட்டவுடனே, உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதனை அறிவித்தார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த குடந்தை திருநகரத்தை மாநகராட்சியாக உயர்த்திய மாமகன், மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கருத்தில் கொண்டு, புதிய பேருந்து நிலையம் வழங்கிய திராவிட நாயகன் முதல்வர் அவர்களையும், அந்த அமைச்சர் அவர்களையும், நான் வணங்கி மகிழ்கிறேன்.

தமிழர் வரலாறு 3,600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதற்கான பல வரலாறுகள், ஆதாரங்களைக் கொண்டு, கீழடி அருங்காட்சியகம் அமைந்திருக்கிறது. 5,000 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழன் இரும்பைக் கண்டுபிடித்தான் என்ற வரலாறை முதன்முதலாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நம்முடைய சபையிலே அறிவித்திருக்கிறார்கள் என்ற பெருமை. அந்த பெருமைக்கும்

திராவிட மாடல் அரசு என்பதை பேரவையில் குறிப்பிடுகிறேன். நெடுஞ்சாலைத் துறை மேற்பொறியாளர் அலுவலகம் திருச்சியில் இருந்தது. அந்த நிர்வாக அலுவலகத்தை தஞ்சாவூரை தலைமையிடமாக மாற்றித் தந்திருக்கிறார். நெடுஞ்சாலைத் துறை நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தை தஞ்சாவூரில் இயங்கி வந்ததை கும்பகோணம் தலைமையிடமாக மாற்றி உத்தரவிட்டிருக்கிறார் நம்முடைய அமைச்சர் அவர்கள். அவருக்கு நன்றி. தஞ்சாவூர் விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளில் முடிவற்றப் பகுதியாக உள்ள தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் வருவதற்கு ஏறத்தாழ ஒரு மணி நேரம் ஆகும். ஆனால், இப்போது நம்முடைய அமைச்சர் அவர்களுடைய மிகநெடிய பணிகளால் இருபது நிமிடங்களாக இன்றைக்கு குறைந்திருக்கிறது என்பதை அந்த பகுதி மக்கள், முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறார்கள். கும்பகோணத்திலிருந்து விக்கிரவாண்டி வரும் தேசிய நெடுஞ்சாலையில் அணைக்கரை முதல் கிழக்கு கடற்கரைச் சாலையிலுள்ள சிதம்பரம் வழியாக புதுச்சேரி வருவதற்கு ஏற்கெனவே 33½ மணிநேரம் வரை ஆகும். ஆனால், தற்போது 1 ½ மணி நேரமாக இருக்கிறது.

நாமெல்லாம் பிறந்த மண்ணால், பேசும் மொழியால், உண்ணும் உணவால், உடுக்கும் உடையால், குடிக்கும் நீரால், சுவாசிக்கும் காற்றால், ஆடிய மைதானத்தால், நாளை அடங்கப் போகும் ஆறடி மண்ணால், நாம் தமிழா தமிழா என்ற உணர்வோடு, இந்த இளைஞர்களோடு எப்போதும் வாழவேண்டும் தமிழ் வாழ்க, தமிழ்நாடு வாழ்க, வெல்லும், வெல்லும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வெல்லும். போராடும், போராடும் தமிழ்நாடு போராடும் (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு க. அன்பழகன் பேசினார்.

விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி தலைமையில் பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் கடலூர் மண்டல பொறுப்பாளர் சி.பிரதீப் முன்னிலையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் QR codeல் பதிவு செய்தவர்கள் 200க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றார்கள். மேலும் மாவட்ட நிர்வாகிகள் ம.ஜெயச்சந்திரன், ஆர்.கற்பகம், மாநில நிர்வாகி மோ.தேன்மொழி, பொறியாளர் அணி நிர்வாகிகள் சுரேஷ், துரை ஸ்டாலின், செந்தில்குமார், ஆனந்தகுமார் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

விவசாயிகளிடம் இருந்து அதிகமாக நெல் வரக்கூடிய இடங்களில்

அதிதிறன் நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைத்திடுவீர்!

சட்டப் பேரவையில் – துரை சந்திரசேகரன் கோரிக்கை!

சென்னை, ஏப்.5- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, திருவையாறு தொகுதி கழக உறுப்பினர் துரை சந்திரசேகரன், "விவசாயிகளிடமிருந்து நெல் அதிகமாக வரக்கூடிய இடங்களில், அதிதிறன் கொண்ட நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைத்திடவேண்டும்" என வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு: –

துரை. சந்திரசேகரன்: ஒரத்தநாடு வட்டம், பஞ்சநதிக்கோட்டையில், இரு தினங்களுக்கு முன்பு Mega DPC ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். 10 DPCs அதிதிறன் கொண்ட நேரடி கொள்முதல் நிலையங்கள் கொள்முதல் செய்கின்ற நெல்லை, ஒரே DPCல் கொள்முதல் செய்கின்ற அளவிற்கு, அதாவது, ஒரே நாளில் 15 ஆயிரம் மூட்டைகளை, dryer மூலம் உலர்த்தி, எடை போட்டு, சாக்கு தைத்து, இயந்திரம்மூலம் ஏற்றப்படும் வசதிகளெல்லாம் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, எங்கெல்லாம் விவசாயிகளிடமிருந்து அதிகமாக நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டுமோ, அங்கெல்லாம் அதே போன்ற Mega DPC அமைக்க அரசு முன்வருமா என்பதையும், அதற்கான திட்டம் எதுவும் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் அர. சக்கரபாணி: உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, சில தினங்களுக்கு முன்பு, அதாவது, 29 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட பஞ்சநதிக் கோட்டையில் மெகா நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. தற்போது நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சுமை தூக்கும் தொழிலாளர்களைக் கொண்டுதான் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், தற்போது அமைக்கப்பட்டுள்ள மெகா நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் மூலமாக, நாளொன்றுக்கு 200 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்திடவும், அதற்கு, விவசாயிகளிடமிருந்து நெல்லை மூட்டையில்லாமல் டிராக்டர் மூலமாகக் கொண்டுவந்து, மொத்தமாக அதைக் கொள்முதல் செய்து, தானியங்கி முறையில் dryer மூலம் உலரவைத்து, சுத்தம் செய்து, துல்லிய எடையுடன் தானியங்கி முறையில் சாக்குப் பைகளில் நிரப்பி, conveyor மூலமாக

லாரிகளில் ஏற்றும்வகையில், அதிதிறன்கொண்ட நெல் கொள்முதல் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டது. சோதனை முறையில் இதைச் செயல்படுத்திடும் வகையில், 1 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ளது. பரிட்சார்த்த முறையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இம்மையம், அப்பகுதி விவசாயிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில் முதன்முறையாக இந்த Mega DPC திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அது நல்ல முறையில் செயல்படுமேயானால், உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, வருகின்ற காலங்களில் தமிழகத்தில் எங்கெல்லாம் அதிகமாக நெல் விளைகிறதோ, அங்கெல்லாம் இந்த pilot schemeஐ நடைமுறைப்படுத்துவது குறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதைச் செயல்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

அயலக திராவிட முன்னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பாக, கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா, சமூக நல்லிணக்க ரமலான் விருந்து குவைத் பாலிவுட் உணவகம் நாகூர் அனிபா நூற்றாண்டு அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில், தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன் ஏற்பாட்டில் செயலாளர் அம்மையப்பன் செல்வம், மதுக்கூர் பிரேம் பிரசாந்த் சிவக்குமார், பழனி, நல்லரசு, போத்தியப்பன், அன்பழகன் சிறப்பு அழைப்பாளர்களாக, முஃப்தி அ.உமர் ஷரீஃப் காஸ்மி, மவ்லவி, ஆலிம் இம்தாதி, மவ்லவி ஷேக் அலி ஃபீர்தவ்ஸி, மார்க்கத்தின் நெறிமுறைகளையும் கழகத் தலைவரின் சிறப்பான ஆட்சியையும் மக்களுக்கு எடுத்துரைத்து உரை நிகழ்த்தினர். அஸ்லாம் நன்றி கூறினார்.